# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க. 807/2022/கூ.தே.5 நாள்: 05.09.2022

பொருள்: மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை W.P.No.16497/2019 மீதான தீர்ப்பாணை – விருதுநகர் மாவட்டம் க்யூ. 886 – சத்திரப் புளியங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் – தலைவர் மற்றும் துணைத்தலைவர் பதவிகளுக்கான தேர்தல் – 4 வார (4 weeks) காலத்திற்குள் தேர்தல் திட்டம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் நீதிப்பேராணை மனு எண் W.P.No.16497/2019 மீதான தீர்ப்பாணை, நாள்:12.07.2022. (ஆணையத்தில் பெறப்பட்ட நாள் : 16.08.2022).
2) துணைப்பதிவாளர் (அருப்புக் கோட்டை) அவர்களின் கடிதம் ந.க. 382/2019/சப, நாள் : 03.08.2022. (மின்னஞ்சல் வழி ஆணையத்தில் பெறப்பட்ட நாள் : 16.08.2022).

*****

பார்வை 1–ல் கண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பாணையில் விருதுநகர் மாவட்டம், க்யூ. 886 சத்திரப் புளியங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் பதவிகளுக்கான தேர்தலினை தீர்ப்பாணை பெறப்பட்ட 4 வார காலத்திற்குள் தேர்தல் அறிவிப்பு செய்து நடத்த வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ள நிலையில் பார்வை 2–ல் காணும் துணைப்பதிவாளர் கடிதத்தில் இச்சங்கத்தின் தேர்தல் நடவடிக்கைகளை தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலினை அறிவிப்பு செய்து நடத்தும் நிலையிலிருந்து தொடர்ந்திட தேர்தல் அட்டவணை கோரப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பாணை மற்றும் துணைப்பதிவாளர் அறிக்கையின் அடிப்படையில் இச்சங்கத்தின் தலைவர் மற்றும்

துணைத்தலைவர் தேர்தலினை அறிவிப்பு செய்து நடத்திட மீண்டும் புதிதாக தேதிகளும் நேரங்களும் இணைப்பில் உள்ளவாறு ஆணையத்தினால் அறிவிக்கப்படுகின்றன.

கூட்டுறவு சார்பதிவாளர் நிலையிலுள்ள வேறொரு புதிய தேர்தல் அலுவலரை நியமித்திடவும், கூட்டுறவு சங்க விதிகளுக்கு உட்பட்டு தேர்தலை சுதந்திரமாக மற்றும் நியாயமாக நடத்திடவும், போதிய காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடு செய்திடவும், வேட்பாளர்கள் விருப்பப்படின் அவரவர் தம் சொந்த செலவில் ஒளிப்பதிவு (Video coverage) மேற்கொள்ள அனுமதித்திடவும் அறிவுறுத்தப்படுகிறது.

இத்தேர்தல் திட்டப்படியான தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நிலையிலும் அரசால் அறிவிக்கப்பட்டுள்ள கொரோனா (COVID – 19) தொற்று தடுப்பு விதிமுறைகளான, சமூக இடைவெளியினைப் பின்பற்றுதல் (Social Distancing), முகக்கவசம் அணிதல், கிருமி நாசினி பயன்படுத்துதல் போன்ற அனைத்து அறிவுரைகளையும் தவறாது கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

ஆணையருக்காக

**இணைப்பு :** தேர்தல் திட்டம்

**பெறுநர்:**

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர், சென்னை – 10.
2) கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் / தேர்தல் பார்வையாளர், விருதுநகர் மண்டலம்.
3) கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் / மாவட்ட தேர்தல் அலுவலர், அருப்புக்கோட்டை சரகம்.

**நகல் :** கூதே.3 பிரிவு

இணைப்பு : – ந.க.எண். 807/2022/கூதே.5

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.

தேர்தல் திட்டம்

| வ.எண் | விவரங்கள் | நாள் |
|---|---|---|
| 1 | தலைவர் / துணைத்தலைவர் தேர்தலுக்கான கூட்ட அறிவிப்பு நாள் | 07.09.2022 |
| 2 | தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் நாள் | 12.09.2022<br>நேரம் : 10 மு.ப முதல் |

ஒம்/–
ஆணையர்

ஆணையருக்காக

08.09.2022

D:\807- 2022 PROCEEDINGS.docx